
பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆனி 10 | செவ்வாய்க்கிழமை | 24.06.2025 | அதிர்வு 324

## யாழில் இரவிரவாகத் தொடரும் 'அணையா விளக்கு' போராட்டம்

(விரிவான செய்தி 4ஆம் பக்கம்)





# கொழும்பு வந்தார் ஐ.நா. ஆணையர்

## பிரதமருடன் முதல் சந்திப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று இலங்கையை வந்தடைந்தார்.

அவர் நாளைமறுதினம் வரை இலங்கையில் தங்கியிருப்பார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

07

# மனிதப் புதைகுழிகளின் பெரும் கூடாரமாக உலக நாடுகளால் பார்க்கப்படும் செம்மணி

## சர்வதேச நீதி வேண்டும் என்று சிறீதரன் எம்.பி. வலியுறுத்து



(பிரபாகரன் டிலக்சன்)

"செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் குழந்தைகள், இளம்பெண்கள், இளைஞர்கள் ஆகியோருடையவை எனத் தடயவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் எவற்றிலும் ஆடைகள் இருக்கவில்லை. அவர்கள் அடித்துக் கொல்லப்பட்டே புதைக்கப்பட்டிருக்கின்றனர். செம்மணிப் பிரதேசம் மனிதப் புதைகுழிகளின் பெரும்

06




திருகோணமலை மாநகர சபையின் முதலாவது மேயராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கந்தசாமி செல்வராஜா (சுப்புரா) தெரிவாகி இருக்கின்றார்.

நேற்று நண்பகல் வரை தமிழரசுக் கட்சி இந்தத் தேர்தலில் மேயர் பதவியை பெறுமா என்ற சந்தேகம் பலர் மத்தியிலும் – தமிழரசுக் கட்சியின் மாவட்டக் கிளைத் தலைவராக இருந்து கொண்டு குறுக்கும் மறுக்குமாகக் காய் நகர்த்திக் கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசனுக்கு கூட – இருந்த நிலையில், நேற்றைய தெரிவு முடிவுகள் தமிழரசுக்குப் பெரு வெற்றியாக அமைந்தன. 25 உறுப்பினர்களைக் கொண்ட மாநகராட்சி மன்றத்தில் 19 – 6 என்ற கணக்கில் செல்வராஜா வெற்றி பெற்றிருக்கிறார். அவர் கூட தமக்கு இத்துணை வெற்றியை எதிர்பார்த்திருக்க மாட்டார்.

இதற்குப் பின்னாலும் பல குத்து வெட்டுக்கள், கால்வாரல்கள் தாராளமாக இடம்பெற்றன. அவற்றையும் தாண்டி,

06





# மட்டக்களப்பில் நேற்று தீப்பந்தங்களை ஏந்தி ‘அணையா விளக்கு’ போராட்டத்துக்கு ஆதரவு

**(பாறுக் ஷிஹான்)**

செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரி நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியுள்ள “அணையா விளக்கு“ போராட்டத்துக்கு ஆதரவு கோரியும், அந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையிலும் மட்டக்களப்பில் தீப்பந்தங்களை ஏந்திப் போராட்டம் நடைபெற்றது.

நேற்று மாலை மட்டக்களப்பு, கோட்டைக்கல்லாறு – ஒந்தாச்சி மடப் பாலத்துக்கு அருகாமையில் இந்தத் தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி

தொடர்ச்சி▼














# மட்டக்களப்பில் நேற்று தீப்பந்தங்களை ஏந்தி ‘அணையா விளக்கு’ போராட்டத்துக்கு ஆதரவு

தொடர்ச்சி▲

கோரியும், சர்வதேசக் கண்காணிப்புடன் மனிதப் புதைகுழி யின் அகழ்வை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியும் பல்வேறு சுலோகங்களை ஏந்திக் கோஷமிட்டனர்.

இந்தப் போராட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள், பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பல தரப்பினர் கலந்துகொண்டிருந்தனர்.








# யாழில் இரவிரவாகத் தொடரும் ‘அணையா விளக்கு’ போராட்டம்

## உதவி கோரும் போராட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

“மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிக்காத வகையிலேயே “அணையா விளக்கு“ போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இரவிரவாகத் தொடரும் இந்தப் போராட்டத்துக்குத் தேவையான மலர்கள், தேங்காய் எண்ணெய், விளக்குத் திரிகள் மற்றும் மின்பிறப்பிக்கான பெற்றோல் போன்றவற்றை மக்களிடம் எதிர்பார்த்து நிற்கின்றோம்.”

– இவ்வாறு “அணையா விளக்கு” போராட்ட ஒருங்கிணைப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம், செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைக்குழிக்குச் சர்வதேச நீதி கோரி “மக்கள் செயல்”– அமைப்பின் ஏற்பாட்டில் “அணையா விளக்கு” எனும் மூன்று நாள் தொடர் போராட்டம் யாழ். நல்லூர் வளைவுக்கு அருகில் நேற்றுக் காலை ஆரம்பமாகி தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இரவுப் பொழுதில் கதை படித்தல், ஆவணப்படம் திரையிடல் போன்றன இடம்பெறுகின்றன.

இந்நிலையில், இந்தப் போராட்டம் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்காத வகையில் நாளை புதன்கிழமை வரை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று போராட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

“இந்தப் போராட்டத்துக்குத் தேவையான மலர்கள், தேங்காய் எண்ணெய், விளக்குத் திரிகள் மற்றும் மின் பிறப்பிக்கான பெற்றோல் போன்றவற்றைத் தரக்கூடியவர்கள் தந்து உதவுமாறும் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். போராட்டக் களத்தில் இருக்கக்கூடியவர்களுக்கான உணவு, நீர் வசதிகளையும் தரக்கூடியவர்கள் தந்து உதவுமாறும் கோரிக்கை விடுக்கின்றோம்.” – என்றும் போராட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.










# முதன் முறையாக ஈழத்தில் கால்வைத்த போது என்னை இழந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது

## இயக்குநர் கு.கணேசன் தெரிவிப்பு




(எஸ். ரகுதீஸ்)

"முதன் முறையாக ஈழத்தில் கால் வைத்த போது என்னை நான் இழந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது."

– இவ்வாறு இசைப்பிரியாவின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாக கொண்டு போர்க்களத்தில் ஒரு பூ என்ற திரைப்படத்தை இசைஞானி இளையராஜாவின் இசையமைப்பில் இயக்கிய இயக்குநர் கு.கணேசன் தெரிவித்தார்.

முதன் முறையாக ஈழத்திற்கு பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், ஞாயிற்றுக்கிழமை யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முதன் முறையாக ஈழத்தில் கால் வைத்த போது என்னை நான் இழந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது.

2009 இற்கு முன்னர் புலம்பெயர் தேசங்களில் பல அமைப்புகள் மிகவும் கட்டுக்கோப்பாக யாராலும் அசைக்க முடியாத பலத்துடன் இயங்கின. இன்று சுயநலத்தினால் அந்த நிலை தலைகீழாக மாறியுள்ளது. ஒருவர் மீது ஒருவர் மாறி மாறி குற்றச்சாட்டுகளை சுமத்தும் போக்கு காணப்படுகிறது. அடுத்தவர் மீது குறைசொல்லும் போக்கை கைவிட்டு என் இன விடுதலைக்காக நான் என்ன செய்தேன், செய்து கொண்டிருக்கிறேன் என சிந்தித்து பார்க்க முன்வரவேண்டும்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள ஈழத் தமிழர்கள் உங்கள் மனச்சாட்சியை தொட்டு கேட்கனும். அந்த நாடுகளில் காலை வைத்த உடன் இமிக்கிரேசன் அதிகாரிகளிடம் நீங்கள் ஒவ்வொரு வரும் புலிகள் என்ற வார்த்தையை சொல்லித்தான் அகதி அங்கீகாரத்தை பெற்றுள்ளீர்கள். ஒன்றில் புலிகள் அமைப்பில் இருந்தேன் அதனால் பிரச்சினை இல்லாவிடில் புலிகளால் பிரச்சினை என்று வாக்குமூலம் வழங்கி அதனடிப்படையில் தான் அகதி அங்கீகாரத்தை பெற்றுள்ளீர்கள். புலிகள், இயக்கம் என்ற வார்த்தையை சொல்லாமல் பயன்படுத்தாமல் கல்வி பின்புலத்தில் சென்றவர்கள் மிக சொற்பமானவர்களே. பெரும்பாலானவர்கள் இந்த வார்த்தைகளை உச்சரித்தே அங்கீகாரத்தை பெற்றுள்ளனர்.

அப்படிப்பட்டவர்கள் இன்று இனம் வீழ்த்தப்பட்ட பின்னர் அழிக்கப்பட்ட பின்னர் அவற்றை முடிந்துபோன விடயமாக கடந்து செல்கின்றார். அதுமாத்திரமல்ல தமிழின விடுதலைக்காக பாடுபட்டுட்டு வரும் என்னைப் போன்றவர்களையும் விட்டுவிட்டு ஒதுங்கச்சொல்வது தான் கொடுமையான விடயம். இவ்வாறான நிலைதான் ஈழத்தமிழினத்தின் இன்றைய அவலத்திற்கு காரணம்.

தமிழ் மொழிக்காகவும், தமிழர் கலாசாரத்திற்காகவும், எதிர்கால சந்ததிக்காகவும், சுதந்திர தேசத்திற்காக தமது உயிரை துச்சமென மதித்து போர்க்களத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் கனவுகளை மறந்துவிட்டால் மனிதனாக இருப்பதற்கே தகுதியில்லாதவர்கள் ஆகிவிடுவோம்.

இவ்வாறு எமக்காக வீரச்சாவடைந்த மாவீரர்களது குடும்பத்தினரும் போராடிய போராளிகளும் இன்று எதிர்காலம் குறித்த உத்தரவாதமின்றி வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. எனது பயணத்தில் இதனை நேரடியாக கண்டுகொண்டேன். கடை ஒன்றிற்கு போயிருந்த போது அங்கு 18 வயது பெண் பிள்ளை வேலை செய்துகொண்டிருந்தது. என்னம்மா படிக்கிற வயதில் வேலைக்கு வந்திருக்கிறாயே படிக்கவில்லையா என்று கேட்டேன். பரீட்சை எழுதிவிட்டு வேலைக்கு வந்திருப்பதாக கூறினார். அப்பா இல்லையா என்று கேட்டதற்கு அப்பா இயக்கதில இருந்தவர். 2009 இல இறந்திட்டார் என்று கூறியபோது எனது கண்கள் கலங்கிவிட்டன. மாவீரர் ஒருவரின் மகள் 25 ஆயிரம் ரூபா சம்பளத்திற்கு கடை ஒன்றில் வேலை செய்கிறார். அவரது நிலையை பார்த்த போது மிகவும் கவலையாக இருந்தது. இவரைப்போன்று எத்தனையோ பேர் இங்கு இவ்வாறு இருக்கின்றார்கள்.

இவ்வாறனவர்களுக்கு மத்தியில் வெளிநாடுகளில் இருந்து வரும் பலர் நீச்சல் தடாகம் இருக்கும் ஆடம்பர விடுதிகளாக தேடி தங்கியிருந்து உல்லாசம் அனுபவிக்கிறார்கள். அந்த பிள்ளையை பார்க்கும் போது எனக்கு வலிக்கிறது. இதைப்போன்று வலிகளுடன் வாழ்ந்துவரும் எமது உறவுகளுடன் கூட நின்று அவர்களும் வாழுவதற்கு வழியை காட்டுங்கள். குறிப்பிட்ட சிலர் இவ்வாறானவர்களுக்கு உதவிசெய்து வருகின்றார்கள். அவர்களை நான் கடவுளாக பார்கிறேன். இருந்த இடத்தையும் இமிக்கிரேசன் அதிகாரிகளிடம் உச்சரித்த வார்த்தைகளையும் மறந்துவிட்டு சுகபோகமாக வாழ்ந்து வருபவர்கள் பலர் உள்ளனர். இந்த நிலை மாறவேண்டும்.

அடுத்தவர்கள் மீது குறைசொல்வதை விட்டு எனது நாட்டிற்கு எனது மக்களுக்கு எனக்கு வாழ்வு தந்த மாவீரர்களுக்கு என்ன செய்யப்போகின்றேன் என்பதை யோசியுங்கள். உயிர்கொடுத்த அத்தனை பேரின் ஆத்மாக்களும் இந்த மண்ணில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கு. அந்த ஆத்மாக்கள் தான் என்னை இன்று இங்கு கொண்டுவந்து சேர்த்திருக்கு என்று நான் நம்புகிறேன். அந்த மாவீரர்களது கனவுகளை நோக்கி பயணிக்கும் அத்தனைபேரும் ஒன்றிணைந்து பயணித்தால் ஒரு தீர்வு கிடைக்கும்." – என்றார்.

# எட்டு மாத பெண் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

மூச்சு விட கஷ்டப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட எட்டு மாத பெண் குழந்தை ஒன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

மீசாலை கிழக்கு, மீசாலையைச் சேர்ந்த திலக்சன் திசாரா என்ற எட்டு மாத பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

மேற்படி குழந்தையை அழைத்துக் கொண்டு முழங்காவில் உள்ள உறவினர் வீடு ஒன்றுக்கு பெற்றோர் சென்றிருந்தபோது அங்கு குழந்தை மூச்சு விட கஷ்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் குழந்தை நேற்று திங்கள் கிழமை அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை சாவகச்சேரி பொலிஸார் நெறிப்படுத்தினர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

19 உறுப்பினர்களின் ஆதரவை தமிழரசுக்குப் பெற்று தந்ததில் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரனின் தந்திரோபாயம் மெச்சத்தக்கது.

தமிழரசுக் கட்சியின் தலைமையை மீறி, தம்பாட்டில் எதேச்சாதிகாரமாக மாவட்ட மட்டத்தில் காய்களை நகர்த்தி, குழப்பங்களை ஏற்படுத்திய குகதாசனின் நடவடிக்கையினால் நேற்று நண்பகல் வரை குழப்பம் நீடித்தது. ஆயினும் திருகோணமலையில் இந்த விடயத்தில் சுமந்திரனின் பிரசன்னப் பங்களிப்பு, சங்குக் கட்சியையும் அரவணைத்து, நல்லதோர் வெற்றியை தமிழரசுக்குப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது.

ஒரே சமயத்தில் முஸ்லிம் காங்கிரஸுடனும், சங்கு தரப்புடனும் ஆதரவுக்காக ஊடாட முயன்ற குகதாசன், பிரதி மேயர் பதவியை தருவதாக இரண்டு தரப்புக்கும் வாக்கு கொடுத்துப் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தார். அதனால் சங்கு அணி தமிழரசின் காலை திருகோணமலையில் வாரும் நிலைமை இருந்தது. ஆயினும் ரெலோ தலைவர்களுடன் பேச்சு நடத்தி, சமாதானப்படுத்தினார் சுமந்திரன்.

நான்கு உறுப்பினர்களின் ஆதரவை வழங்கிய சங்குக்குப் பிரதி மேயர் பதவியை வழங்காமல், மூன்று உறுப்பினர்களின் ஆதரவை நல்கிய முஸ்லிம் காங்கிரஸுக்கு அந்தப் பதவியைக் கொடுத்து சங்கு தரப்பின் முகத்தில் கரி பூசினார் குகதாசன்.

ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழரசுக் கட்சியின் தலைமையை மீறி, சங்கோடு சேர்ந்து செயல்பட்ட குகதாசன், இப்போது அதே சங்குத் தரப்புக்கு காலை வாரிய போது சங்குத் தரப்பில் சீற்றம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஆயினும் ரெலோவின் தலைவர்கள் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் குருசாமி சுரேந்திரன் ஆகியோருடன் சுமந்திரன் பேச்சு நடத்தி, அவர்களை சமரசமாக்கி, இன்று நடைபெறும் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் தலைவர் தெரிவின் போதும் தமிழரசுக்கு சங்கின் ஆதரவை உறுதிப்படுத்தி இருக்கிறார்.

அந்தப் பிரதேச சபை தலைவர் தெரிவு தொடர்பில் தமிழரசுக் கட்சித் தலைமையின் முடிவுக்கு மாறாக, பிறிதொருவரை நிறுத்தும் குகதாசனின் நடவடிக்கைக்கு இதன் மூலம் 'செக்' வைக்கப் பட்டிருக்கின்றது.

தப்பித் தவறி கட்சித் தலைமை பெயர் குறித்து நியமித்துள்ள சுரேஷ்குமாருக்குப் பதிலாக வேறு யாரையும் குகதாசன் இந்தப் பிரதேச சபை தலைவர் பதவிக்கு நியமிக்க முயன்றால், சங்கு மற்றும் சுயேச்சை தரப்புகளோடு சேர்ந்து அதற்கு ஆப்பு வைக்க தமிழரசுத் தலைமை தயாராகி இருப்பதாகவும் தெரிகிறது.

இந்த உள்ளூராட்சி சபை தலைவர்கள் தேர்வு முடிந்ததும் மாவட்டக் கிளை தலைவர் குகதாசன் தொடர்பில் தமிழரசு கட்சியின் தலைமை காத்திரமான முடிவு எடுக்கக் காத்திருப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது.

இந்தத் தெரிவுகளுக்குப் பின்னர் நடைபெறக் கூடிய கட்சியின் அரசியல் குழுக் கூட்டங்கள், மத்திய குழுக் கூட்டங்களுக்கு குகதாசன் தலை காட்டாமல் தவிர்க்க முயல்வார் என்பது நிச்சயமாக இருக்கும்.

* * *

சாவகச்சேரி பிரதேச சபை தலைவரைத் தெரிவு செய்யும் தேர்தலில், திருவுளச் சீட்டு மூலம் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் வெற்றி பெற்றிருக்கிறார். அங்கு இடம்பெற்ற தேர்தலும் அதையொட்டிய சம்பவமும் முக்கியமான விடயம் என்று நினைக்கின்றேன். எதிர்காலத்தில் பிரதேச சபைகளை ஒட்டி வரக்கூடிய வழக்குகளில் முன்னுதாரணம் ஒன்று அங்கு இருப்பதாக நான் கருதுகிறேன்.

இந்தச் சபையில் இலங்கைத் தமிழரசு கட்சிக்கு எட்டு ஆசனங்கள் கிடைத்தன. தவிரவும் ஈ.பி.டி.பி. மற்றும் மான் தரப்புகளின் தலா ஒவ்வொரு உறுப்பினர்கள் என மொத்தம் பத்து உறுப்பினர்களின் ஆதரவு தமிழரசு கட்சிப் பக்கம் இருந்தது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஏழு இடங்களையும், தேர்தலின் பின்னர் அதனோடு அணி சேர்ந்த சங்கு தரப்பு ஐந்து இடங்களையும் கொண்டிருந்தன. அதனால் அந்த தரப்புக்கு 12 ஆசனங்கள் இருந்தன.

ஆயினும் தமிழரசுக் கட்சி தரப்பினர் தாக்கல் செய்த வழக்கின் அடிப்படையில சைக்கிள் கட்சியில் ஒருவர் கூட்டத்தில் பங்கு பற்றுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை விதித்திருந்தது.

11 பேருடன் அந்த அணி நேற்று களத்தில் இருந்த போதிலும், தலைவர் தெரிவின் போது மாத்திரம் சைக்கிள் கட்சியில் ஒருவர் வாக்களிக்காமல் விட, தமிழரசுக்கும் சைக்கிள் - சங்கு கூட்டணிக்கும் தலா 10 வாக்குகள் என்ற சமநிலை வந்தது. திருவுளச் சீட்டில் தமிழரசு வென்றது.

சைக்கிள் கட்சி சார்பில் உறுப்பினராக இருக்கின்ற செ.ஆனந்தகுமார் என்பவரே அந்தக் கூட்டணியின் தவிசாளர் வேட்பாளருக்கு வாக்களிக்காமல் விட்டவர். அப்படி அவர் வாக்களிக்காமல் விட்டதன் பின்னணியில் முக்கியமான காரணம் இருந்தமை அவதானிக்கத் தக்கது.

இந்த உள்ளூராட்சி தேர்தல் நடைபெற்ற போது சைக்கிள் தரப்பும் சங்கு தரப்பும் ஒன்றை ஒன்று எதிர்த்து வட்டாரங்கள் தோறும் போட்டியிட்டன.

அப்படி ஒரு வட்டாரத்தில் போட்டியிட்ட சைக்கிள் கட்சியின் ஆனந்தகுமார், அந்த வட்டாரத்தில் சங்கு கூட்டணியில் போட்டியிட்ட புளொட் கட்சி வேட்பாளர் செ.மயூரன் என்பவரிடம் நான்கு வாக்குகளினால் தோற்றுப் போனார்.

அப்படி தோற்றுப் போன ஆனந்தகுமாருக்கு பட்டியல் மூலம் நியமனம் வழங்கியது சைக்கிள் கட்சி.

இப்போது அதே புளொட் பிரமுகர் மயூரனை பிரதேச சபை தலைவருக்கு சைக்கிள் தரப்பு முன்னிறுத்தி, அவருக்கு வாக்களிக்கும்படி ஆனந்தகுமாரைக் கேட்டுக்கொண்டது. ஆனால் தம்மை எதிர்த்துப் போட்டியிட்டு வட்டாரத்தில் தம்மை நான்கு வாக்குகளால் தோற்கடித்த புளொட் கட்சியின் வேட்பாளருக்கு ஆனந்தகுமார் வாக்களிக்கவில்லை. தலைவர் தெரிவுக்கான வாக்களிப்பின் பங்குபற்றவும் இல்லை.

ஆயினும் பின்னர் பிரதி தவிசாளரை தெரிவு தெரிவு செய்யும் தேர்தலில் தமது சைக்கிள் கட்சி வேட்பாளரை நிறுத்தப்பட்டமையால் அவருக்கு வாக்களித்து 11 – 10 என்ற கணக்கில் அவர் வெற்றி பெறுவதற்கு வழி செய்தார் ஆனந்தகுமார்.

ஒட்டுக் கட்சிகள், மாற்றுக் குழுக்கள் போன்றவற்றோடு சேர மாட்டோம் என்ற அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் அல்லது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுதிப்பாட்டில்தான் தாம் கட்சியில் போட்டியிட்டார் என்றும், அக்கட்சியின் சார்பில் பிரதேச சபை உறுப்பினரானார் என்றும் குறிப்பிடும் ஆனந்தகுமார், தேர்தலின் பின்னர் அதே ஒட்டுக் குழுக்களுடன் அணி சேர்ந்து கொண்டு, அதற்கு வாக்களிக்கும் படி கேட்டதை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், அதன் காரணமாகவே அத்தேர்தலில் தாம் தம் மனச்சாட்சிப்படி பங்குபற்றவில்லை என்றும் இப்போது கூறுகின்றார்.

அவரது கருத்தில் நியாயம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

## மனிதப் புதை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூடாரமாக உலக நாடுகளால் பார்க்கப்படுகின்றது. எனவே, இந்த மனிதப் புதைகுழிகளுக்குச் சர்வதேச நீதி வேண்டும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பமான "அணையா விளக்கு" தொடர் போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"பல தசாப்த காலமாக ஈழத்து மண்ணிலே தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு வந்தார்கள். இங்கு இனப்படுகொலை இடம்பெற்றதற்கு ஆதாரமாகப் பல இடங்களில் மனித எலும்புக்கூடுகள் தொடர்ந்தும் மீட்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் யாழ். செம்மணிப் பகுதியில் உள்ள சித்துப்பாத்தி இந்து மயானத்திலும் மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இங்கு மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் குழந்தைகள், இளம் பெண்கள், இளைஞர்கள் ஆகியோருடையவை எனத் தடயவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் எவற்றிலும் ஆடைகள் இருக்கவில்லை. அவர்கள் அடித்துக் கொல்லப்பட்டே புதைக்கப்பட்டிருக்கின்றனர்.

செம்மணிப் பிரதேசம் மனிதப் புதைகுழிகளின் பெரும் கூடாரமாக உலக நாடுகளால் பார்க்கப்படுகின்றது. எனவே, இந்த மனிதப் புதைகுழிகளுக்குச் சர்வதேச நீதி வேண்டும்."

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் யாழ்ப்பாணம் வருகின்றபோது அவருக்கு செம்மணிப் புதைகுழி தொடர்பான உண்மையைத் தெளிவுபடுத்தும் வகையில் பல்வேறு தரப்பினருடைய முயற்சியால் மேற்கொள்ளப்படும் இந்த "அணையா விளக்கு" போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் நாம் ஒன்றுகூடியிருக்கின்றோம்.

எங்களுக்கு நடந்தது இனப்படுகொலை. தமிழ் மக்களுக்குச் சர்வதேச விசாரணை வேண்டும். நாங்கள் தொடர்ந்தும் சிங்கள அரசுகளால் ஏமாற்றப்படுகின்றோம். இப்போது இருக்கின்ற அநுர அரசால்கூட தமிழர்கள் தொடர்ந்து ஏமாற்றப்படுகின்றார்கள். இதுவரை காலமும் இருந்தஅரசுகளுக்குஅநுரஅரசும்சளைத்தது அல்ல என நிரூபிக்கும் வகையில் அரசின் அண்மைய நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

சர்வதேச விசாரணையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும், இங்கு கண்டெடுக்கப்படுகின்ற எலும்புக்கூடுகளுக்கான உரிய விசாரணையை வலியுறுத்தியும் இடம்பெறும் இந்தப் போராட்டத்துக்கு என்னுடைய முழுமையான ஆதரவைத் தொடர்ந்தும் வழங்குவேன். இந்தப் போராட்டத்துக்கு மக்களும் அணிதிரண்டு வந்து ஆதரவு வழங்க வேண்டும்." – என்றார்.



# தென்னை உற்பத்தியாளர்களுக்கு மானிய விலையில் தேங்காய் உரம்

தென்னை உற்பத்தியாளர்களுக்கு மானிய விலையில் தேங்காய் உரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் உள்ள சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் மற்றும் தென்னை பயிர்ச்செய்கை சபை ஆகியவை இணைந்து சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பலுகஸ்வெவ தோட்டத்தில் இதற்கான நிகழ்வு நடைபெற்றுள்ளது.

மானிய விலையில் தேங்காய் உரத்தை வழங்கும் தேசிய திட்டத்திற்கு இணங்க தென்னை பயிர்ச்செய்கை சபை 146 தென்னை செய்கையாளர்களுக்கு 30 மெட்ரிக் தொன் தேங்காய் உரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

# ரணிலின் பிரதான நெறிமுறை அதிகாரி உள்ளிட்ட இருவரிடம் வாக்குமூலம் பெறுவதற்கு தீர்மானம்




முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான நெறிமுறை அதிகாரி உள்ளிட்ட இருவரிடம் வாக்குமூலம் பெறுவதற்கு குற்றப்புலனாய்வு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு விஜயங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்காக மேற்படி இருவரிடமும் வாக்குமூலம் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அதிகாரிகள் தற்போது வெளிநாட்டில் உள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் அவர்களை நாட்டிற்கு அழைத்து வருவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## கொழும்பு வந்தார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2016ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஒருவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

கொழும்புக்கு நேற்று வருகை தந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கை வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா வரவேற்றார்.

அதன்பின்னர் வோல்கர் டர்க், பிரதமர் ஹரிணி அமரசூரியவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கையில் உள்ள பல்வேறு மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவையும் சந்திக்கவுள்ளார்.

மேலும் அவர், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிரேஷ்ட அரச அதிகாரிகள், மதத் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் இராஜதந்திர சமூக உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல் நடத்தவும் அவர் திட்டமிடப்பட்டுள்ளார்.

வோல்கர் டர்க், தலதா மாளிகையில் வழிபாடு நடத்தவும், மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்களைச் சந்திக்கவும் திட்டமிட்டுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைக்குச் சென்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர்களைச் சந்திக்கவும் அவர் திட்டமிடப்பட்டுள்ளார் என்றும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.




## யாழ்ப்பாணம் - கல்கிசை இடையே

# ஜூலை முதலாம் திகதி முதல் தினமும் குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில் சேவை!

ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் யாழ்ப்பாணம் – கல்கிசை இடையே குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயில் சேவை தினமும் இடம்பெறும் என்று யாழ்ப்பாணம் பிரதான ரயில்நிலைய அதிபர் ரி.பிரதீபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“யாழ்ப்பாணம் – கல்கிசை இடையே குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயில் சேவை கடந்த சில வாரங்களாக வார இறுதி நாள்களிலேயே முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. ஆனால் அண்மைக் காலமாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் நிமித்தமும், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதமாகவும் ஜூலை மாதம் முதலாம் திகதிமுதல் இந்தச் சேவையைத் தினமும் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான நேர அட்டவணை விரைவில் அறிவிக்கப்படும்.” – என்றார்.

# நிதியமைச்சின் செயலாளராக ஹர்ஷன சூரியப்பெரும நியமனம்



நிதியமைச்சின் செயலாளராக கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் இதற்கான நியமனக் கடிதம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்று முற்பகல் வழங்கப்பட்டது.

இதனிடையே, வெற்றிடமாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காக தகுதியான ஒருவரை பெயரிடுமாறு தேர்தல் ஆணைக்குழு தேசிய மக்கள் சக்திக்கு அறிவித்துள்ளது.



# விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

கிளிநொச்சி 54 ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்திருந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விநாயகர்புரம், கிளிநொச்சியைச் சேர்ந்த சின்னராசா பிரதீபன் (வயது 34) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர் மோட்டார் சைக்கிளின் பின்னிருக்கையில் இன்னொருவரை ஏற்றிக்கொண்டு கடந்த 21 ஆம் திகதி சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் கார் ஒன்றை முந்தி செல்ல முற்பட்டபோது எதிரே எரிவாயு சிலிண்டர் ஏற்றி வந்த வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் பின் இருக்கையில் அமர்ந்து சென்றவர் உயிரிழந்த நிலையில் படுகாயங்களுக்கு உள்ளானவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# 15 கடல் மைல் தூரம் நீந்தி கரை சேர்ந்த மீனவர்



(எஸ்.ரகுதீஸ்)

புயல் காற்றினால் படகு கவிழ்ந்த நிலையில் மீனவர் ஒருவர் 15 கடல் மைல் தூரம் நீந்தி படகு ஒன்றின் உதவியுடன் கரை சேர்ந்த நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.00 மணியளவில் காற்றுடன் பலத்த மழை பெய்த போது கட்டைக்காட்டில் இருந்து கடற் தொழிலுக்கு சென்ற கட்டை காட்டை சேர்ந்த நீக்கிளாஸ் கேடிஸ் (வயது 36) என்ற மீனவரின் படகு கடும் காற்று காரணமாக புரண்டுள்ளது. இதனால் படகில் இருந்த வெளியிடப்பு இயந்திரம், வலைகள், தொலைபேசி என்பன கடல் மூழ்கியுள்ளன.

படகு மூழ்கிய நிலையில் சுமார் 15 கடல் மேல் தூரம் நீந்தி சென்று அதிகாலை1.00 மணியளவில் அப்பகுதியில் இருந்த படகில் ஏறி உயிர் தப்பிய நிலையில் அவர் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# போதைப்பொருள் பாவனை

கடந்த ஐந்து மாதங்களில் சுமார் இரண்டு தொன் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள் நாட்டில் கைப்பற்றப்பட்டுள்ளன என்ற அதிர்ச்சித் தகவலை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம் வருவதை ஒட்டி அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இந்தத் திடுக்கிடும் தகவலை வெளிப்படுத்தினார்.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து இப்போது வரை மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சோதனைகள் தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய கருத்து வெளியிட்டார்.

அதற்கமைய, இதுவரையான காலப்பகுதியில் 1,253 கிலோகிராம் ஹெராயினும் 2,121 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருளும் 12,439 கிலோகிராம் கஞ்சாவும், 22 கிலோகிராம் கொக்கேய்ன்னும், 26 லட்சம் போதை மாத்திரைகள் மற்றும் வில்லைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தளவு உயர்வலுக் கொண்ட மிக மோசமான போதைப் பொருள்கள் இவ்வளவு பெருந்தொகையில் நாட்டில் அகப்பட்டிருப்பது பல்வேறு கேள்விகளை எழுப்பி உள்ளது.

முதலாவது - ஏற்கனவே போதைப் பொருள் பாவனையால் நமது சமூகம் - குறிப்பாக இளம் சமூகம் - சீரழிந்திருக்கும் நிலையில், கைப்பற்றப்பட்ட இத்துணை அளவு போதைப் பொருளும் சமூகப் பாவனைக்குள் சிக்குபட்டிருந்தால் நமது சமுதாயத்தின் நிலை என்னவாகியிருக்கும்?

இரண்டாவது - இத்துணை அளவு போதைப் பொருள் சிக்கி இருந்தாலும், சட்டத்தரப்புகளின் கைகளில் சிக்காமல் வெளியில் பாவனைக்குச் சென்றதும், இன்னும் பாவனைக்காக காத்திருப்பதும் எவ்வளவு தொகை? அதனால் ஏற்படப் போகும் பாதிப்புகள் என்ன?

அடுத்தது - இவ்வளவு தூரம் போதைப்பொருள் பாவனைக்குள் நாடு சிக்கு பட்டிருக்கும் நிலையில் அதிலிருந்து மீளுவதற்கு நாடாக - மக்கள் கூட்டமாக - சமுதாயமாக - நாம் என்ன செய்யப் போகின்றோம்?

- இந்தக் கேள்விகள் நம் எல்லோரையும் மலைக்க வைப்பனவாக நம் முன்னே எழுந்து நிற்கின்றன.

ஒரு புறம் ஆபத்தான போதைப் பொருள் பாவனை, கடத்தல், விற்பனை மற்றும் அவற்றினால் எழும் குற்றங்களைத் தடுத்துக் கட்டுப்படுத்துவதற்காக சட்டம் - ஒழுங்கைப் பேணும் பொறுப்பைக் கொண்ட பொலிஸ், கலால் துறை, நீதித்துறை போன்றவை சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் விடாது மல்லுக் கட்டிக் கொண்டு நின்றாலும் மறுபுறம் வெட்ட வெட்டத் தளைக்கும் களை போல போதைப் பொருளுக்கு அடிமையாதல் என்ற இந்த விஷ(ம)ம் பேயுருக் கொண்டு எழுந்து சந்நதமாடிக் கொண்டுதான் இருக்கின்றது. குறைவதாகவோ, ஓய்வதாகவோ இல்லை.

தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டு வாரியம் (NDDCB), பிற முக்கிய அரசு நிறுவனங்களுடன் இணைந்து, சமூகத் திட்டங்கள், பாடசாலை விழிப்புணர்வுப் பிரசாரங்கள் மற்றும் மறுவாழ்வு சேவைகள் மூலம் போதைப்பொருள் பயன்பாட்டைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு தன்னால் இயன்ற வரைக்காத்திரமாகப் பங்காற்றி வருகின்றது. அதே போல மருத்துவ, சுகாதாரத் துறையும் போதைப்பொருள் பாவனையில் இருந்து சமூகத்தை விடுவிக்கும் முயற்சியில் காத்திரமாகச் செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறு நாட்டின் பல்வேறு துறைகளும் பெரும் பாடுகளைச் சுமந்து, பெரும் நிதிச் செலவினத்துடன் போதைப் பிசாசுக்கு எதிராக சளையாது போராடியும் கூட, அந்த அரக்கனை அடியோடு ஒழிக்க முடியாமல் இருப்பதுதான் பெரும் பின்னடைவு நிலைமையாகும்.



# ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கு மீதான விசாரணை ஜூலை 30 வரை ஒத்திவைப்பு

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் ஜூலை மாதம் 30 ஆம் திகதி வரை கொழும்பு மேல் நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ 2010 – 2014 வரையான காலப்பகுதிகளில் வர்த்தக அமைச்சராகச் செயற்பட்ட போது ச.தொ.ச நிறுவனத்தின் 153 ஊழியர்களை அவருடைய அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தியதால் அரசுக்கு 4 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டது எனக் கூறி இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்த வழக்கின் சாட்சியாளரை எதிர்வரும் ஜூலை மாதம் 30 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.



# இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களுக்கு இந்தியா வரை இலவச விமான வசதி

இந்திய அரசாங்கத்தின் இலவச விமான பயண வசதிகளை வழங்கும் திட்டத்தின் கீழ் நாடு திரும்புவதற்கு எதிர்பார்க்கும் இலங்கை பிரஜைகளை பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பதிவு செய்வதற்கான செயற்பாடுகள் நேற்றும், இன்றும் மாத்திரம் முன்னெடுக்கப்படும் என இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

ஜோர்தானின் அம்மான் நகரிலிருந்து இந்தியாவின் புதுடெல்லி நோக்கி செயற்படுத்தப்படவுள்ள இந்த விமானங்களில் இலங்கையர்களுக்காக சில ஆசனங்களை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த விமானங்களில் பயணிக்க எதிர்பார்ப்பவர்களுக்கு இஸ்ரேலின் – டெல் அவிவ் நகரிலிருந்து ஜோர்தானின் அம்மான் நகருக்கு செல்வதற்கு இலவச போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும் எனவும் நிமல் பண்டார குறிப்பிட்டுள்ளார்.

ஜோர்தானிலிருந்து இந்தியாவின் புதுடில்லிக்கான விமான சேவைக்கும் கட்டணம் அறவிடப்படமாட்டாது எனவும் இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியிருந்து கொழும்பிற்கு வருகை தருவதற்காக அவர்கள் கட்டணம் செலுத்தி விமான பயணச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

விமான பயணங்களின் போது உரிய நாடுகளின் தூதரகங்களினூடாக அதற்கான நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படும் என இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.




## குஜராத்தில் 2027 இல் ஆம் ஆத்மி புயல் வீசும்:

# இடைத்தேர்தல் வெற்றிக்குப் பின் அரவிந்த் கேஜ்ரிவால் உத்வேகம்

குஜராத்தில் நடந்த இடைத்தேர்தல் என்பது 2027 சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்கான அரையிறுதிப் போட்டி என தெரிவித்துள்ள அரவிந்த் கேஜ்ரிவால், பொதுத் தேர்தலில் பா.ஜ.க. - ஆம் ஆத்மி கட்சி இடையேதான் போட்டி இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

குஜராத், கேரளா, பஞ்சாப், மேற்கு வங்கம் ஆகிய 4 மாநிலங்களில் 5 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு ஜூன் 19 அன்று இடைத்தேர்தல் நடைபெற்றது. இதில், பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இந்த இடைத்தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி 2 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. பா.ஜ.க, காங்கிரஸ், டி.எம்.சி. ஆகியவை தலா ஒரு தொகுதியில் வெற்றி பெற்றுள்ளன.

தேர்தல் முடிவுகளை அடுத்து செய்தியாளர்களிடம் பேசிய ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கேஜ்ரிவால், "குஜராத் மற்றும் பஞ்சாப் இடைத் தேர்தல்களில் ஆம் ஆத்மி கட்சி வெற்றி பெற்றுள்ளது. பஞ்சாபின் லூதியானா மேற்கு சட்டப்பேரவைத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் எங்கள் வேட்பாளர் சஞ்சீவ் அரோரா வெற்றி பெற்றுள்ளார். இந்த தொகுதியில் 2022 இல் நாங்கள் வென்றதை விட கிட்டத்தட்ட இரண்டு மடங்கு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளோம். இதன்மூலம், பஞ்சாப் மக்கள் ஆம் ஆத்மி மீதான தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

குஜராத்தின் விசாவதார் தொகுதியில் ஆம் ஆத்மி வேட்பாளரும், கட்சியின் முன்னாள் மாநில தலைவருமான கோபால் இத்தாலியா, தீர்க்கமான வெற்றியைப் பெற்றுள்ளார். பா.ஜ.கவின் கிரித் படேலை 17,554 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்துள்ளார். குஜராத் மக்கள் இப்போது பா.ஜ.க. மீது வெறுப்படைந்துள்ளனர். ஆம் ஆத்மி கட்சி மீது நம்பிக்கையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

பஞ்சாபிலும், குஜராத்திலும் ஆம் ஆத்மியை தோற்கடிக்க காங்கிரஸும், பா.ஜ.கவும் முயன்றன. ஆனால், மக்கள் அவர்களை நிராகரித்துள்ளனர். குஜராத் மற்றும் பஞ்சாப் ஆகிய இரண்டு மாநிலங்களின் இடைத்தேர்தல்களிலும் இரு மடங்கு வாக்கு வித்தியாசத்தில் நாங்கள் வெற்றி பெற்றுள்ளோம்.

2027 இல் பஞ்சாப், குஜராத் ஆகிய இரண்டு மாநிலங்களிலும் சட்டப்பேரவை பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. சிலர் இது 2027 இற்கான அரையிறுதி என்று கூறுகிறார்கள். 2027 இல் ஆம் ஆத்மி கட்சியின் புயல் வீசும். குஜராத்தைப் பொறுத்தவரை, 2027 தேர்தல் போட்டி என்பது பா.ஜ.க - ஆம் ஆத்மி கட்சி இடையேதான் இருக்கும். பா.ஜ.கவை தீர்க்கமாக எதிர்க்கும் கட்சியாக, வலுவுள்ள கட்சியாக குஜராத் மக்கள் ஆம் ஆத்மியைத்தான் பார்க்கிறார்கள்." என தெரிவித்தார்.

# போதைப்பொருள் வழக்கில் நடிகர் ஸ்ரீகாந்த் கைதானார்



## பொலிஸார் தீவிர விசாரணை

போதைப்பொருள் பயன்படுத்திய வழக்கில் நடிகர் ஸ்ரீகாந்த்தை சென்னை - நுங்கம்பாக்கம் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த வழக்கில் திரையுலகைச் சேர்ந்த வேறு யாருக்காவது தொடர்பு இருக்கிறதா என்பது குறித்து அவரிடம் போலீஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னையைச் சேர்ந்த பிரசாத் என்பவரிடமிருந்து நடிகர் ஸ்ரீகாந்த் போதைப்பொருள் வாங்கியுள்ளார் என கூறப்படுகிறது. அவரிடமிருந்து 12 ஆயிரம் ரூபா மதிப்பிலான ஒரு கிராம் போதைப் பொருளை நடிகர் ஸ்ரீகாந்த் 40 முறைக்கு மேல் வாங்கிப் பயன்படுத்தி வந்தார் என கூறப்படுகிறது. அதற்கான பணப்பரிவர்த்தனை கூகுள் பே மூலம் நடந்துள்ளதாகவும் தெரிகிறது.

இது குறித்து விசாரணை நடத்திய சென்னை - நுங்கம்பாக்கம் பொலிஸார், நேற்று காலை 8 மணிக்கு, நடிகர் ஸ்ரீகாந்த்தை பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர். இந்த விசாரணையின்போது, அவருடைய ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, மருத்துவப் பரிசோதனையும் நடத்தப்பட்டது. இதில் நடிகர் ஸ்ரீகாந்த் போதைப்பொருள் பயன்படுத்தினார் என்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து நுங்கம்பாக்கம் பொலிஸார், நடிகர் ஸ்ரீகாந்த்தை கைது செய்துள்ளனர்.

மேலும், இந்த போதைப்பொருள் வழக்கில் யார் யாருக்கெல்லாம் தொடர்பு இருக்கிறது? திரையுலகைச் சேர்ந்தவர்கள் வேறு யாருக்காவது தொடர்பு இருக்கிறதா என்பது குறித்து நுங்கம்பாக்கம் பொலிஸார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

போதைப்பொருள் வழக்கில் ஏற்கெனவே பிரசாத் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில், போதைப்பொருள் வழக்கில் நடிகர் ஸ்ரீகாந்த்துக்கு தொடர்பு இருப்பது தெரியவந்ததாக கூறப்படுகிறது.





# கட்டாரில் உள்ள அமெரிக்காவின் தளங்கள் மீது ஈரான் தாக்குதல்

கட்டாரில் உள்ள அமெரிக்க தளங்களை நோக்கி ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலின் முக்கிய பாதுகாப்பு அதிகாரியை மேற்கோள் காட்டி இந்த தகவல் வெளியாகியுள்ளது.

இதன்போது 6 ஏவுகணைகளை ஈரான் ஏவியதாக இஸ்ரேலிய தரப்பு கூறியுள்ளதாக அந்த செய்தியில் குறிப்படப்பட்டுள்ளது. கட்டார் தலை நகர் டோஹாவில் வெடிச்சத்தம் கேட்டதாகவும் கூறப்படுகிறது.





# இஸ்ரேல் நகரங்களில் ஒலிக்கும் சைரன்; தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தும் ஈரான்

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் போரை முடிவுக்குக் கொண்டுவருவோம் என்ற எச்சரிக்கையை பொருட்படுத்தாமல், இஸ்ரேல் நகரங்கள் மீது ஈரான் புதிதாக ஏவுகணைத் தாக்குதலைத் தொடங்கியுள்ளது.

இதனால் பல நகரங்களில் ஓயாமல் சைரன் சத்தங்கள் ஒலிக்கின்றன. ஜெருசலேமில் பயங்கர குண்டுவெடிப்பு சத்தங்கள் கேட்டன என ஊடகங்கள் தெரிவித்தன.

ஈரான் - இஸ்ரேல் இடையே 11 ஆவது நாளாக மோதல் நீடிக்கும் நிலையில், நேற்றும் ஈரானிலிருந்து ஏவுகணைகள் மூலம் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. ஈரானின் ஏவுகணைகள் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டதால், இஸ்ரேலின் பல்வேறு நகரங்களில் சைரன்கள் ஒலித்தன.

இதுகுறித்து இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிக்கையில், "சிறிது நேரத்திற்கு முன்பு, ஈரானில் இருந்து இஸ்ரேல் நாட்டை நோக்கி ஏவப்பட்ட ஏவுகணைகள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து இஸ்ரேல் முழுவதும் ஜெருசலேம் உள்பட பல பகுதிகளில் சைரன்கள் ஒலித்தன" என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், இஸ்ரேலின் அஷ்டோட், லாச்சிஷ் ஆகிய இடங்களில் தாக்குதல்கள் நடந்ததாக இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்தன. தெற்கு இஸ்ரேலில் உள்ள அஷ்டோட் பகுதியில் பாலிஸ்டிக் ஏவுகணை தாக்கியதாக தகவல் வெளியாகியுள்ளது. அதே நேரத்தில் ஜெருசலேம் நகருக்கு தெற்கே உள்ள லாச்சிஷ் பகுதியில் நடந்த தாக்குதலால் கடும் சேதம் ஏற்பட்டதாக ஊடகங்கள் தெரிவித்தன. ஜெருசலேம் பகுதியில் மிகவும் சத்தத்துடன் குண்டு வெடிப்பு ஒலிகள் கேட்டதாக ஊடகங்கள் தெரிவித்தன. ஜெருசலேம் மீது ஏவுகணைகள் உயரமாக பறப்பதையும் இஸ்ரேல் ஊடகங்கள் செய்தியாக்கியுள்ளன.

மத்திய மற்றும் தெற்கு இஸ்ரேலை நோக்கி அதிகளவில் ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளதால் அப்பகுதிகளில் சைரன்கள் மூலம் வான்வழித் தாக்குதல் எச்சரிக்கைகளை செயல்படுத்தியுள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக நஹாரியா, கெஷர் ஹாசிவ், ஹிலா, மியோனா மற்றும் மியில்யா உள்ளிட்ட நகரங்களில் சைரன்கள் ஒலித்து வருவதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே, ஈரான் ஆயுதப் படைகளின் மத்திய தலைமையகத்தின் செய்தித் தொடர்பாளர் இப்ராஹிம் சோல்ஃபாகாரி வெளியிட்டுள்ள





காணொலி ஒன்றில்,

"இஸ்ரேலுடன் இணைந்து அமெரிக்கா ஈரான் மீது தாக்குதல் நடத்தி உள்ளது. இது கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தும். அமெரிக்காவின் இந்த நடவடிக்கை, ஈரான் ஆயுதப் படைகளுக்கான சட்டப்பூர்வ இலக்குகளை விரிவுபடுத்தியுள்ளது. அமெரிக்கா தனது செயல்களுக்கு கடுமையான விளைவுகளை எதிர்பார்க்க வேண்டும். ட்ரம்ப், நீங்கள் ஒரு சூதாட்டக்காரர். நீங்கள் இந்தப் போரைத் தொடங்கலாம், ஆனால் நாங்கள்தான் அதை முடிவுக்குக் கொண்டுவருவோம்." என்று தெரிவித்துள்ளார்.



# ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்; 950 பேர் உயிரிழப்பு; 3,450 பேர் காயம்

ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களில் இதுவரை 950 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் 3,450 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் வொஷிங்டனை சேர்ந்த மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

ஈரான் - இஸ்ரேல் இடையிலான போர் இரண்டாவது வாரமாக தீவிரமடைந்துள்ளது. இரு நாடுகளும் ஏவுகணைகளை வீசி கடுமையான தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இஸ்ரேலுக்கு ஆதரவாக, ஈரான் அணுசக்தி தளங்கள் மீது அமெரிக்காவும் தாக்குதல் நடத்தியதால், மத்திய கிழக்கில் பெரும் பதற்றம் நிலவுகிறது.

இந்த நிலையில், வொஷிங்டனை தளமாகக் கொண்ட மனித உரிமைகள் ஆர்வலர்கள் குழு, ஈரானில் உயிரிழந்தவர்கள் குறித்த புள்ளிவிவரங்களை வழங்கியுள்ளது. அதன்படி, ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களில் இதுவரை 950 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் 3,450 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர்களில், 380 பொதுமக்களும், 253 பாதுகாப்புப் படை வீரர்களும் அடங்குவர் என அந்த புள்ளிவிவரங்கள் தெரிவித்தன.

ஈரானில் மாஷா அமினியின் மரணம் தொடர்பான 2022 போராட்டங்களின் போது ஏற்பட்ட உயிரிழப்பு புள்ளிவிவரங்களை விரிவாக வழங்கிய இந்த மனித உரிமைகள் ஆர்வலர்கள் குழு, ஈரானில் உள்ள உள்ளூர் அறிக்கைகள் மற்றும் தங்களின் தொடர்புகள் மூலமாக இந்த விவரங்களை திரட்டியுள்ளது.

# தேசியப் பாதுகாப்புப் பேரவையை உடன் கூட்டி நாட்டின் நெருக்கடி தொடர்பில் முடிவு எடுங்கள்!

## ஈரான் - இஸ்ரேல் மோதல் விளைவு குறித்து சஜித் கோரிக்கை



பாரசீக வளைகுடாவை அரேபிய கடலுடன் இணைக்கும் ஹார்முஸ் ஜலசந்தி மூடப்படும் போது, மசகு எண்ணெய், இயற்கை எரிவாயு துறையில் பெரும் பிரச்சினை எழும். ஈரானிய நாடாளுமன்றத்தின் தீர்மானத்தின் பிரகாரம், ஹார்முஸ் ஜலசந்தியை மூடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன. ஒட்டுமொத்த சர்வதேச எண்ணெய் வர்த்தக விநியோகத்தில் 20 முதல் 30 வீதத்துக்கு இடையிலும், சர்வதேச இயற்கை எரிவாயு விநியோகத்தில் மூன்றில் ஒரு பகுதிக்கும் அதிகமானவை இந்த ஜலசந்தி நீர் வழித்தடம் ஊடாக செல்வதால், எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகளில் கடுமையான அதிகரிப்பு ஏற்படும் என பல தரப்பினரும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஒரு நாடாக நாம் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காமல், தேசிய பாதுகாப்பு பேரவைக் கூட்டத்தை கூட்டி, எழுந்துள்ள இந்த பிரச்சினைக்குத் தீர்வுகளைக் காண வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இந்த ஹார்முஸ் ஜலசந்தி மூடப்படும் பட்சத்தில் எரிசக்தித் துறையில் ஏற்படும் பாதிப்பை நிவர்த்தி செய்ய மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்தியா, ரஷ்யா ஆகிய நாடுகள் இறக்குமதி செய்யும் எண்ணெயின் அளவை தற்போது அதிகரித்துள்ளன. நாடாக நாமும் இது குறித்து ஆராய்ந்து இதன்பால் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறே, மத்திய கிழக்கில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்கள் குறித்து ஆராய்ந்து, அவர்களினது வாழ்க்கைப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது எழுந்துள்ள சூழ்நிலைக்கு மத்தியில் ஏதேனும் தொழில் இழப்புகள் ஏற்பட்டால், அது நாட்டை கடுமையாக பாதிக்கும்.

எனவே இந்த விடயம் உள்ளிட்ட விவகாரங்களைப் பன்முக நோக்கில் ஆராயந்து பார்க்குமாறு நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசேட கூற்றை முன்வைத்து தெரிவித்தார்.

மேலும், சுற்றுலாத் துறை பொருளாதார வளர்ச்சி, பணவீக்கம், உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு கையிருப்பு ஆகியவற்றிலும் இது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இத்தகைய சூழ்நிலையில், தற்போதைய அரசாங்கம் நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பை நல்கி வரும் தொழிற்துறை, விவசாயம் மற்றும் சேவைகள் துறை உட்பட ஒட்டுமொத்த துறைகளிலும் ஏற்படும் தீங்கு விளைவிக்கும் தாக்கத்தை கையாள்வதற்கு ஏற்ற தேசிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும். சகல தரப்பினருடனும் கலந்துரையாடி தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வை காண வேண்டும்.

அவசர பொருளாதார வேலைத்திட்டத்தின் தேவை நமக்கு காணப்படுகிறது. இதனை விரைந்து செயல்படுத்தப்பட வேண்டும். இந்தப் பொருளாதார வேலைத்திட்டத்தை முன்னெடுக்க சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாட வேண்டும். இருதரப்பு மற்றும் பல்தரப்பு உறவுகளை வளர்த்துக் கொண்டு, சர்வதேச சமூகத்துடன் இணைந்து நமது நாடு எதிர்கொள்ள காத்திருக்கும் சவால்களுக்கு தீர்வுகளை வழங்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிலைமை நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் என்பதால், நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் மூலோபாய ரீதியாக பேச்சுவார்த்தைகளைத் நடத்தி, தளர்வான அணுகுமுறையை நோக்கி நகர வேண்டும். உலகளாவிய தெற்குக்கு எமது நாட்டிற்கு தலைமைத்துவத்தை வழங்குவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாகும். சார்க் அமைப்பு உள்ளிட்ட உலகளாவிய அமைப்புகளில் கவனம் செலுத்தி, உலகளாவிய தெற்கில் நாம் எதிர்கொள்ளும் சவால்களை உலகின் கவனத்துக்கு கொண்டு சென்று, தற்போதைய மோதல் உக்கிரத்தை குறைப்பதற்கும், மோதல் நிலைமையைக் குறைப்பதற்கும் இராஜதந்திர ரீதியாக எடுக்க முடியுமான சகல தலையீடுகளையும் எடுக்க வேண்டும். தேசிய பாதுகாப்பு பேரவையின் அவசரக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்து, இந்த உலகளாவிய நிலைமை குறித்து கலந்துரையாட வேண்டும். - எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கற்பிட்டி - பாலாவி வீதியில் விபத்து ஒருவர் மரணம்; இருவருக்குக் காயம்

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

கற்பிட்டி - பாலாவி வீதியில் ஏத்தாளை பிரதேசத்தில் பாலவியில் இருந்து கற்பிட்டி நோக்கிய பயணித்த லொறியொன்று அதே திசையில் பயணித்த ஓட்டோவை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில், எதிர் திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் லொறி, ஓட்டோ இரு வாகனங்களும் வீதியில் கவிழ்ந்து விபத்துள்ளாகின.

விபத்தில் ஓட்டோ ஓட்டுநரும் லொறியின் சாரதியும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் மரணித்தவர் 38 வயதுடையவர். தலவில பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

சடலம் கற்பிட்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.






# வவுனியாவில் புதூர் நாகதம்பிரான் ஆலய பிரதான வீதி காப்பெற் இடப்பட்டு திறப்பு

(கி.வசந்தன்)

வரலாற்று சிறப்பு மிக்க வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய பிரதான வீதிக்கு காப்பெற் இடப்பட்டு நேற்றைய தினம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனால் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

வரலாற்றுச்சிறப்பு மிக்க புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழாவான நேற்றையதினம் நாடு முழுவதும் இருந்தும் பெருமளவான பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தருகின்ற நிலையில் அவர்களின் போக்குவரத்தை சிரமமின்றி மேற்கொள்ளுவதற்காக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் வழிகாட்டுதலின் அடிப்படையில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் 24 மில்லியன் ரூபா செலவில் 1.75 கிலோ மீற்றர் வீதிக்கு காப்பெற் இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.











# இன்றைய ராசி பலன்கள் - 24.06.2025




பொறுமையான அணுகுமுறை தேவை. திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உறுதியான அணுகுமுறை தேவை.

பணியிடச் சூழல் அவ்வளவு சிறப்பாக இருக்காது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து செல்ல வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

கால் வலியால் அவதிப்பட நேரலாம். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு உற்சாகமான மகிழ்சிகரமான நாள். இன்றைய தினத்தை கொண்டாடி மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த திருப்தி அளிக்கும். உங்கள் விருப்பங்களை திருப்திகரமாக நிறைவேற்றும் நாள்.

பணியில் அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன. நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள். இன்று கிடைக்கும் புதிய வாய்ப்புகள் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்களின் கருத்துக்களை உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று திருப்திகரமாக இருக்கும். இன்று நீங்கள் பணம் சேமிப்பீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களை வருத்திக்கொள்ளாமல் இருந்தால் இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்றைய நாளை முன்கூட்டியே திட்டமிட்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும். அதனால் சில பிரச்சினைகள் ஏற்படும். எனவே சிறிது கவனமுடன் இருக்க வேண்டும்.

இன்று சாதகமான பலன்களைப் பெற அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். இன்று சிறப்பான நாளாக அமையாது. இன்று பணிச்சுமை காணப்படும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இன்று பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று பணபுழக்கம் போதுமானதாக இருக்காது. தேவையற்ற செலவினங்கள் அதிகமாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. பலன்கள் தாமதமாகக் கிடைக்கும். அதிகம் எதிர்பார்க்காதீர்கள். பிரார்த்தனையில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிடுங்கள்.

உங்கள் மனதில் காணப்படும் பதட்டத்தை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் நலம். உங்களை அமைதியாக வைத்திருங்கள்.

உங்கள் மதிப்பு மிக்க உடைமைகளை பத்திரமாக வையுங்கள். இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் பணத்தை இழக்க நேரலாம்.




இன்று உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இன்று அவ்வளவு சிறப்பான நாளாக அமையாது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

இன்று பணியில் உங்களிடம் பொறுமை காணப்படாது. இதனால் தவறுகள் நேரலாம். மனதை நிலைப்படுத்தி பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நீங்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. நீங்கள் கடன் வாங்க நேரலாம். சிறந்த முறையில் பணத்தை நிர்வகிக்க முயலுங்கள்.

தொண்டை எரிச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. குளிர்ச்சியான நீரைப் பருக வேண்டாம். உடற்பயிற்சி செய்வது நல்லது.




இன்று உங்களின் சொந்த முயற்சி மூலம் வளர்ச்சி காணப்படுகின்றது. வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் பதவி உயர்வுக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பு பாராட்டைப் பெறும். உங்கள் பணியின் தரத்தை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உங்கள் அன்பு அதிகரிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக காணப்படுகின்றது. இன்று பணத்தை சுதந்திரமாக கையாள்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக சிறந்த ஆரோக்கியம் காணப்படும்..




இன்று சுறுசுறுப்பான மன நிலையில் காணப்படுவீர்கள். மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். சுய வளர்ச்சிப் பாதையில் செல்வீர்கள். உங்களிடம் மாற்றம் உணர்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்து வீர்கள். இதற்கு உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கையே காரணம்.

உங்கள் துணையுடன் சுமுகமாகப் பழகுவீர்கள். உங்கள் அனுசரனையான அணுகுமுறை அவரை மகிழ்விக்கும். உறவில் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக காணப்படும். உங்கள் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் மிகவும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




உங்களால் இன்று மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள முடியாது. வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மனதுக்கு ஆறுதல் கிடைக்கும்.

பணியில் வெற்றி காண மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். எனவே சுமுகமாக பணிகள் நடைபெற திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் குறைந்த நேரத்தை செலவு செய்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் பணத்தை இன்று முறையாக பயன்படுத்த இயலாது.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.06.2025




இன்று சிறிது சோம்பலுடன் காணப்படுவீர்கள். மனதில் குழப்பம் காணப்படும். இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

இன்று முழுவதும் பணியில் முழுகியிருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

இன்று உங்கள் இருவரிடையே காணப்படும் மனக் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. எனவே குழப்பத்தை தவிர்த்து தெளிவான எண்ணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். அஜாக்கிரதை காரணமாக பணத்தை இழக்க நேரலாம்.

கண்களில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.




இன்று மகிழ்ச்சியான நாள். இன்றைய செயல்களின் விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும். கடினமான பணிகளையும் இன்று எளிதாகச் செய்வீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

மேலதிகாரிகளின் பாராட்டுகள் குவிந்து கொண்டே இருக்கும். பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே தரமாக முடித்துத் தருவீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

எதிர்பாராத பண வரவுகள் காணப்படும்.




இன்று சிறந்த அதிர்ஷ்டம் காணப் படும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் அணுகு முறையில் வளைந்து கொடுக்கும் போக்கு காணப்படும்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் விருந்தில் கலந்து கொள்வீர்கள். அவர்களுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் காதல் உணர்வை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் பிரியமான வரிடத்தில் அன்பு அதிகரிக்கும். இன்று பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. பங்கு வர்த்தகத்தின் மூலம் பணம் சம்பாதிப்பீர்கள். இன்று அதிக ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள்.




உங்களின் சொந்த முயற்சி மூலம் இன்று நீங்கள் அபாரமான வளர்ச்சி காண்பீர்கள்.

பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்கலாம். இன்று அர்ப்பணிப்புடன் பணி புரிவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் அணுகுமுறை மூலம் அவரின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள்.

நிதி நிலைமையில் முன்னேற்றம் கானப்படும். வங்கியிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள். திருப்தி நிலவும்.

சாதரணமான அணுகுமுறை மூலம் ஆற்றல் அதிகரிக்கும். அதன் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



# மன்னார் நடுக்குடா கடற்கரைப் பகுதியில் பீடி இலைகள், பீடிக் கட்டுகள் நேற்று மீட்பு

(மன்னார் நிருபர்)

மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி, நடுக்குடா கடற்கரை பகுதியில் வைத்து ஒரு தொகுதி பீடி இலை மூடைகள் மற்றும் ஒரு தொகுதி பீடிக் கட்டுகள் நேற்றுத் திங்கட்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளன.

சட்ட விரோதமான முறையில் இந்தியாவில் இருந்து படகு மூலம் கடத்தி வரப்பட்டு நடுக்குடா காட்டு பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த – 45 மூடைகளில் பொதி செய்யப்பட்ட – 1360 கிலோ பீடி இலைகள் மற்றும் 29 ஆயிரத்து 120 பீடிகள் இவ்வாறு மீட்கப் பட்டுள்ளன.

கடற்படைக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தப் பொருள்கள் மீட்கப்பட்ட நிலையில் கடற்படையினர் மன்னார் மதுவரி நிலைய அதிகாரிகளிடம் அவற்றை ஒப்படைத்துள்ளனர். சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

மேலதிக விசாரணைகளை மன்னார் மதுவரி நிலைய அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.



